## பாடம் 2

(அதிகாரம் 4-24)

## “நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வீர்கள்” (5:7)

இஸ்ரேவல் ஜனங்கள் தேவனுக்கு பிரியமில்லாத காரியத்தை செய்ததாலும், விக்கிரகாரதனை செய்து தேவனுக்கு தூரோகம் செய்ததாலும் (2:3), மற்ற புறஜாதிகளை பாரக்கிலும் அதிகமான பாவங்கள் செய்தபடியாலும் தேவனைடைய நீதியான தீர்ப்பு இஸ்ரவேல் மேல் வரும் என தேவன் எசேக்கியேல் மூலமாய் கூறுகிறார் (5:5-9), இதன் மூலமாய் கர்த்தராகிய என்னை அவர்கள் அறிந்துக்கொள்வார்கள் என தேவன் கூறுகிறார் (6:7), இந்த அதிகார பகுதிகளில் பல காட்சிகளை எசேக்கியேல் பார்க்கிறார். எசேக்கியேல் தரிசனத்தில் எருசலேமுக்கு பயணமாக போகிறார் (அதி 8- 11); உண்மையற்ற மனைவியை கொண்டு சொல்லப்படும் ஒப்புமை (அதி 16); எசேக்கியேலின் தனிப்பட்ட வாழ்க்கை (அதி 14) போன்ற காரியங்களை நாம் பார்க்கிறோம் என்றாலும் தேவனை விட்டு பின்வாங்குகிற ஒருவரின் நிலை எப்படிபட்டதாக இருக்கும் என்கிற பாடத்தை இந்த பகுதிகள் நமக்கு தருகிறது.

1. **தேவனை விட்டு பின்வாங்கும் இருதயம் (6:9)**
    a. **பொல்லாத இருதயம் (எபி 3:12)**
        i. புறஜாதிகளின் பாவத்தை பார்க்கிலும் இஸ்ரவேல் ஜனங்களின் பாவம் மோசமானதாக இருந்தது(5:6)
            1. கிறிஸ்தவர்களாகிய நாமும் இந்த தவறை செய்ய கூடும்
                a. கொரிந்து சபையார் ( 1கொரி 5:1)
                b. தேவனுடைய பிள்ளைகளால் தேவனுடைய நாமம் தூசிக்கப்பட கூடாது (ரோம 2:24)
                c. நாம் மற்றவர்களுக்கு ஒளியாக இருக்கிறோம். (மத் 5:16), நாம் நல்நடக்கை உள்ளவர்களாய் நடத்துக்கொள்ள வேண்டும் (1 பேது 2:12)
            2. ஒருவர் தேவனை விட்டு விலகுவதற்கு என்ன காரணங்கள் இருக்க கூடும்?
    b. **தேவனைவிட்டு விலகியாதற்கான பலனை இஸ்ரவேல் ஜனங்கள் அநுபவிக்க வேண்டியதாக இருந்தது (அதி 6)**
        i. தேவனை விட்டு விலகிப்போகுதல் என்பது அவரை கோபப்படுத்தும் செயலாக இருக்கிறது. (எபி3:15-19)

1. ஏசாயா 1:4-6

2. எரேமியா 30:11-15

ii. தேவனை விட்டு விலகியதால் என்னென்ன தண்டனைகள் வரும் என தேவன் இந்த அதிகாரத்தில் கூறுகிறார்? (அதி 5, 6)

**c. தேவன் தம்மை உத்தம இருதயத்தோடு பின்பற்றும் தன்னுடைய மனிதர்களை பாதுகாக்கிறார். (எசே 14:12-23)**

i. தேவன் தேசத்தை தண்டிப்பதற்கு பயன்படுத்தும் நான்கு விதமான தண்டனைகள் என்னெவெல்லாம் என வசனம் 21 -யில் நாம் பார்க்கிறோம்?

1. பட்டயம் – வெளி 6:4; வெளி 8:6-10

2. பஞ்சம் – வெளி 6:5-6; வெளி 16:8-11

3. துஷ்ட மிருகம் – வெளி 6:8; வெளி 9:4,5

4. கொள்ள நோய் – வெளி 6:8; வெளி 16:1-2

ii. ஆனால் தேவன் தன்னுடைய பிள்ளைகளை பாதுகாக்கிறார் (வ 14)

1. நோவா – தேவனுடைய வார்த்தையின் படி நடத்தவன்

2. தானியேல் - அந்நிய தேசத்தில் தேவனுக்கு உண்மையாயிருந்தவன்

3. யோபு – பொறுமையாய் இருந்தவன்

**iii. "தங்கள் நீதியினால்" (வ 14,20)**

**1. தேவ நீதி (God righteousness) – வெளி 19:8**

a. நீதி என்பது பரிசுத்தவான்களின் அடையாளமாய் இருக்கிறது. அது வஸ்திரமாய் இருக்கிறது என வெளிப்படுத்தல் புத்தகத்தில் நாம் பார்க்கிறோம், ஆதியாகமம் 3:11 -யில் ஆதாம் நிர்வாணியாயிருந்தான் என்பதை போல தேவனுடைய பிள்ளைகள் தல்களுடைய மனதில் நீர்வாணியாக இருக்க கூடாது, அவர்களுடைய

மனது தேவனுடைய நீதியால் கட்டப்பட்டு இருக்க வேண்டும்

b. தேவனுடைய நீதி என்பதே நமக்கும், தேவனை தேடாதவர்களுக்கும் வேறுபாட்டை ஏற்ப்படுத்துகிறது. (2 கொரி 6:14-16 )

   i. எசேக்கியேல் 18:9

   ii. விசுவாசத்திற்கும் தேவநீதிக்கும் தொடர்ப்பு இருக்கிறது.

      1. ரோமர் 1: 17,18 – சுவிசேஷத்தினால் தேவநீதி வெளியாக்கப்பட்டிருக்கிறது.

      2. 2 கொரி 5:21, ரோமர் 3:25 - தேவன் பாவிகளுக்காக தன் குமாரனை கொடுத்தது, அவரால் நாம் பிழைப்பதும் தேவனுடைய நீதியாக இருக்கிறது.

      3. 2 பேது 1:1, ரோமர் 5:1 – இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதினால் நாம் நீதிமான்களாய் மாறுகிறோம்.

      4. நீதி என்பதே நம்முடைய மார்க்கவசம் (எபே 6:14)

      5. நம்முடைய விசுவாசமே நமக்கான நீதியாக இருக்கவேண்டும் (ரோம 4:5,12)

c. நம்முடைய நீதி இயேசு கிறிஸ்துவினால் வருகிறது (பிலி 1:10)

   i. புதிய ஏற்பாடு நீதியை கொடுக்கிறதாக இருக்கிறது (2 கொரி 3:9)

      1. 2 தீமோ 3:16

## 2. சுயநீதி (self-righteousness) - (பிலிப்பியர் 3:9)

a. சுய நீதி என்பது என்ன?

i. உங்கள் எண்ணங்களும் நடத்தைகளும் மற்றவர்களை விட சிறந்தவை என்று நம்புவது.

ii. தேவனை காட்டிலும் தன்னுடைய விருப்பத்திற்கும், திட்டத்திற்கும் பாரம்பரியத்திற்கும் முக்கியத்துவம் கொடுப்பது, செயல்படுவது.

b. சுய நீதி தேவனுடைய நீதிக்கு எதிராக இருக்கிறது (ரோம 10:3)

i. தன்னுடைய நீதியை நிலை நாட்ட விரும்புகிறவர், தேவனுடைய நீதிக்கு கீழ்படிய மாட்டார்.

ii. இஸ்ரவேல் ஜனங்கள் (எசே 5:6)

1. மாற்கு 7:9-12

2. மல்கியா 1:7-14

3. மத் 23:23

iii. நாம் நம்முடைய நீதியை குறித்து எப்பொழுதும் யோசிக்க வேண்டியது என்ன? (ஏசா 64:6)

1. ஒரு மனிதனை சுய நீதிவுடையனாய் மாற்றுவது எது?

a. அறியாமையா?

b. மேட்டிமையா?

c. அகந்தையா?

iv. நாம் சுய நீதி குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும் (1 கொரி 10:12; 2 கொரி 10:12)

1. கலா 2:20 -யின் படி சுய நீதியை நாம் ஜெயிக்க நாம் என்ன செய்யலாம்?

c. தேவனுடைய நீதியே நம்மை பாதுகாக்கிறதாய் இருக்கிறது, நம்முடைய நீதி நம்மை காப்பாற்றது

d. கருத்து: ஒருவர் நீதிவுடையவராய் இருக்கிறார் என்பது, அவரின் குணத்தையும், தனித்தன்மையும் காண்பிக்கிறது, நாம் தேவனுடைய பிள்ளைகளாய் இருப்பதால் இந்த உலகத் கற்றுக்கொடுக்கிற நீதியை பின்பற்ற கூடாது என்பதை நாம் புரித்துக்கொள்ள வேண்டும், அதோடு நாம் தேவனுடைய நீதியின் படி வாழ்வதால் நாம் எந்த இடத்திலும் மற்றவர்களை விட குறைந்துவிட தேவன் விடமாட்டார் என்பதை நாம் புரிந்துக்கொள்ள வேண்டும். நம்முடைய நீதி இயேசுவாக இருப்பதால் இந்த வாழ்கையில் நாம் இயேசுவைப்போலவே வாழ முயற்சி செய்ய வேண்டும்